ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# துறைமுகம் புதினத்தில் மனித வாழ்வின் அவலங்கள்

**முனைவர் இரா.கலைச்செல்வி [1] & செல்வி.அ[2]**

**[1]உதவிப்பேராசிரியர் & [2]முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்**

**தமிழ்த்துறை ,திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி**

**இராசிபுரம் 637401. selvi23630@gmail.com**

**43**

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்க்கையோடு தொடர்பு கொண்டிருக்கும் இலக்கிய வகைகளில் ஒன்று புதினம். புதினம் சமூகத்தில் நிகழும் அனைத்து நிகழ்வுகளையும் மிகத்துல்லியமாக எடுத்துரைக்கின்றன. தோப்பில் முஹம்மது மீரான் அவர்கள் எழுதிய துறைமுகம் புதினத்தில் காணலாகும் அடக்குமுறை, லஞ்சம், ஊழல், வன்முறை, உரிமை மறுப்பு, சுரண்டல், முதலாளித்துவம், அரசியல், நம்பிக்கைகள், கல்வி நிலை, பொருளாதார நசிவு போன்ற அவலங்களை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வில் மனித வாழ்வின் அவலங்கள் பற்றி விளக்கும் முறையில் விளக்கவியல் முறையும் ஒப்பிட்டு பார்க்கும் வகையில் ஒப்பியல் முறையும், சமூகத்துடன் தொடர்புப்படுத்தும் வகையில் சமூகவியல் முறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

**முன்னுரை**

மனிதனின் வாழ்க்கையில் இன்பம் துன்பங்கள் பின்னிப் பிணைந்துள்ளன. மனித வாழ்க்கையில் இன்பத்தை விட துன்பங்கள் மேலோங்கி நிற்கின்றன. மனித வாழ்வில் ஏற்றத் தாழ்வு மிகவும் முதன்மையிடம் பெறுகின்றன.

**"ஏழையென்றும் அடிமை யென்றும்**
**எவனு மில்லை ஜாதியில்**
**இழிவு கொண்ட மனித ரென்ப**
**திந்தி யாவில் இல்லையே**
**வாழி கல்வி செல்வ மெய்தி**
**மனம கிழ்ந்து கூடிய**
**மனிதன் யாரு மொருநி கர்ஸ**
**மான மாக வாழ்வமே"[1]**

என்ற பாரதியார் கவிதை வரிகளுக்கு இணங்க மனித வாழ்க்கையில் ஏழை, அடிமை, சாதி போன்ற பிரச்சனைகள் இருந்துதான் வருகின்றன.

**"கத்தியின்றி ரத்தம் இன்றி**
**யுத்தம் ஒன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை**
**நம்பும் யாரும் சேருவீர்**
**காந்தி என்ற சாந்த மூர்த்தி**
**தேர்ந்து காட்டும் செந்நெறி**
**மாந்தருக்குள் தீமை குன்ற**
**வாய்த்த தெய்வ மார்க்கமே"[2]**

என்ற நாமக்கல் கவிஞர் பாடல்வரிகளுக்கு இணங்க மனிதர்களுக்கு இடையிலே சண்டை, சச்சரவுகள், நிகழ்ந்து கொண்டே தான் இருக்கின்றன. துறைமுகம் புதினத்தில் மனித வாழ்வின் அவலங்கள் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**அடக்கு முறை**

துறைமுகம் புதினத்தில் இஸ்லாமிய சமூகத்தின் மக்கள் கதை எடுத்துரைக்கப்படுகின்றன. இக்கதையில் தலையில் முடி வைத்தல் கூடாது, இருந்தால் வலுக்கட்டாயமாக மொட்டை அடிக்கும் வழக்கம் இருக்கின்றது.

"முஹம்மது ஹஸன் ஹாஜி' சுப்ஹானல்லா. ஹாஜியாரா! ஹாஜியாருக்குத் தலையிலா முடி? முடி வக்கேது ஹராமில்லியா கேட்பீயளா?" இல்லெ நபி வச்சிருந்தது போலத்தான் நான் முடி வச்சிருக்கேன். இது ஹாராமில்லே: நபி எப்படி முடி வச்சாங்கோன்னு எனக்கென்ன தெரியும்? எங்க ஊருலெ முடி வச்ச ஆளுக்க ஊட்டுக் கலியாணத்துக்கும் மவுத்துக்கும் ஊரு சேராது. இஞ்ச ஆரும் முடி வளத்தல்ல. வளத்தினவனல்லாம் கெட்டி வச்சு மொட்டை அடிச்சோம். நாளெ காலத்தை மொட்ட அடிச்சிருங்கொ நிங்களும்."[3]

என்ற துறைமுகம் புதினத்தின் வரிகள் மூலம் தலையில் முடி வைத்தல் கூடாது இல்லை என்றால் கட்டி வைத்து மொட்டை அடிப்பதும் தெளிவாக அறிய முடிகிறது.

**லஞ்சம்**

துறைமுகம் கதையில் மீன் பிடித் தொழில் செய்கின்றனர். இதில் நெய் மீன் என்ற மீனுக்கு நல்ல விலை உண்டு அதனை பிடித்து அனுப்பி வைத்தால் கொழும்பு வியாபாரிகள் விலை குறைவு என்று கூறி மக்களை கவலையில் ஆழ்த்துகின்றனர்.

"மம்மாத்திலின் வாப்பாவும் சம்பை வியாபாரியாகத்தான் இருந்தார். பெருவலையில் ஏராளம் நெய்ம் மீன் பட்டது. ஒரு நாள் நெய்;ம்மீனுக்குக் கிராக்கியான நேரம். கொழுப்பில் நல்ல விலையும் இருந்தது. இரவின் நிசப்தத்தைப் பிளந்துகொண்டு சைக்கிள் மணி கிலுங்கியது. வீட்டு வாசலில் சைக்கிளின் மணி முழக்கம் கேட்டபோது மம்மாத்திலின் வாப்பா விழித்தார். தந்தி தொழும்பிலிருந்து வந்ததென்று தெரியும். ஒண்ணு வாயிச்சுச் செல்லு. மெசஞ்சர் தந்தியை வாசித்தான். அளுக்குளாவுக்கு

நல்ல கிராக்கி. மார்க்கட் 160-180 உள்ளதா? ஆனந்தம் துடி கொட்டியது. மெஞ்சருக்கு வழக்கமான மாமூல் கொடுத்து அனுப்பினார்."[4]

நெய்ம்மீன் நல்ல விலை என்பதை யாரிடமும் சொல்லக்கூடாது என்பதற்காக மெசஞ்சருக்கு லஞ்சம் கொடுத்து அனுப்பியுள்ளார். இதன் மூலம் மனிதன் ஒருவனுக்கு ஒருவன் உதவும் மனப்பான்மை கூட இல்லாமல் இருக்கிறான் என்பதை அறிய முடிகிறது.

துறைமுகம் புதினத்தில் தபால் நிலையம் உண்டு. அதில் வேலை செய்யும் தபால்காரர் பெயர் அம்புரோஸ். ஊர்மக்களில் பெரும்பாலோருக்குக் கொழும்பில் வியாபாரம். எனவே கொழும்புத் தபால்தான் அதிகமாக வரும். ஒரு போதும் ஆள்மாறித் தபால் கொடுக்கவும் மாட்டார். ஒவ்வொரு வீட்டின் முன்வாசலிலும் சாக்கினாலோ துணியினாலோ ஆன திரை தொங்கும். அந்த வாசல் திரையின் மறைவில் தபால்காரர் வரவை எதிர்நோக்கிப்பல பெண்கள் நிற்பார்கள்.

"இன்னா நாலு சக்கரமோ எட்டு சக்கரமோ கொடுப்பார்கள். அதன் பெயர் 'காப்பி குடிக்க' அம்பு ரோஸ் காசைக் கைநீட்டி வாங்கியதும் இரு கண்களில் ஒத்தி ஜோப்பில் சொருகுவார். இது மாமுல் சிலருக்கு அம்புரோஸ் தான் கடிதம் எழுதிக் கொடுப்பதும், வரும் கடிதங்களை வாசித்துக் கொடுப்பதும். அதற்கும் அம்புரோஸ்க்கு ஃபீஸ் உண்டு."[5]

இவ்வாறு தபால்காரன் அம்புரோஸ் தபால் தருவதற்கும் எழுதுவதற்கும் படிப்பதற்கும் லஞ்சம் பெற்றுக் கொள்கிறார். இவை போன்று சமூகத்தில் நிகழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறது.

**ஊழல்**

மீரான்பிள்ளைக்கு கொழும்பு இ.பீ.கு தபால் எழுதுகிறார். தாங்கள் கூடுதல் நெத்திலிக் கருவாடு வாங்கித் தாரையில்லாமல் கட்டு எங்கள் கடைக்கு அனுப்பி வையுங்கள். தங்கள் ஆளாகவே நாங்கள் இருந்து தங்களுக்குக் கூடுமான வரை நல்ல விலைக்கு விற்று முதல் செய்து பணமும் பட்டியலும் அவ்வப்போது அனுப்பி வைக்கிறோம். எங்கள் தூத்துக்குடி கடையில் தங்கள் சரக்கு வந்து இறங்கியதும் அங்கிருந்து தேவையான முன்பணம் பெற்றுக்கொள்ளலாம் என்று மார்க்கெட்டு நிலவரம் குறிப்பிடுகிறார்.

| "மார்க்கெட் நிலவரம் | விலை |
|---|---|
| நெத்திலி – மடி | 140-160 |
| நெத்திலி – வலை | 115-130 |
| அருக்குலா | 190-225 |
| வெஞ்சிலா | 160-175 |
| பாரை | 150-165"[6] |

மீதான் பிள்ளை மார்க்கெட்டு நிலவரம் பார்த்து தனது மனத்தால் பல்வேறு கணக்குகளை போட்டுக்கொண்டார். அடகு வைத்த தோப்புகளையும், நகைகளையும் திருப்பிக்கொள்ளலாம் என்றும், கூரை முட்டி நிற்கும் மகள் ராஹிலாவின் கல்யாணம் செய்து விடலாம் எனவும் தனது மனதால் கணக்கு

போட்டார். ஆனால் சரக்கு கொழும்பிற்குச் சென்ற பிறகுள்ள விலை திடீரென்று விலை தலைகுப்புற விழும். மலபாரிலிருந்து ஏராளமான கட்டுகள் வந்திறங்கியது காரணமாக விலை சரிந்து விட்டதாக விற்று முதல் பட்டியலோடு இணைந்திருக்கும் கடிதத்தில் காணும் பதிவான வாசகம் கண்டு ஏமாற்றம் அடைவார். ஆனால் ஒருபோதும் துரோகம் செய்யமாட்டார்கள் என்ற கபடம் கலவாத நம்பிக்கை எப்போதும் மீரான்பிள்ளையின் மனத்திற்குள் உண்டு. இதன் மூலம் மனிதன் எவ்வளவுதான் அதிகமான நம்பிக்கை கொண்டிருந்தாலும் சமூகத்தில் மனிதன் ஏமாற்றம் தான் அதிகம் பெறுகிறான் என்பதை அறிய முடிகிறது.

**முதலாளித்துவம்**

மீரான்பிள்ளை அக்கிராமத்தை அடைந்தபோது நேரம் காலை எட்டு மணியைத் தாண்டிவிட்டது. துறைக்குத்தகைக்காரர் ஐதுரூஸ் முதலாளியைத் தேடித்தான் அங்கு வந்தார். கொல்லங்கோடு முதல் கோவளம் வரையுள்ள துறைகளிலிருந்து சம்பை போட்டு எடுக்கும் பெரிய வியாபாரி.

"தாங்கள் பற்றிய ரூபாய்த் தங்கள் சரக்கு விற்று வரவு ரூபா நீக்கிப் பாக்கி ரூபா மூணுலச்சத்தி ஐம்பத்தி மூணாயிரத்தி அறுநூத்திக் தொண்ணூத்தி ஆறு உடனடியாக எங்கள் தூத்துக்குடி கடையில் கொடுத்து விடவும் அது துகை கொடுத்தால்தான் மேலும் வரவு செலவு நடக்கும் ரொக்கமாகக் கொடுக்க வசதி இல்லையென்றால் தங்கள் சொத்துக்களை எனது மூத்த மகன் அப்துல்ரஷீது பெயருக்கு விலை எளுதிக் கொடுக்கவும்"[7]

என்று ஈனா பீனா கூனா முதலாளி ஐதுரூஸ் என்பவருக்கு கடிதம் எழுதினார். இதன் முதலாளித்துவம் நிறைந்திருப்பதை காணமுடிகிறது. சுமூகத்தில் வட்டிக்கு பணம் பெறுதலும் தனது சொத்தை எழுதிக்கொடுத்தும் பணம் பெறுதலும் நடைபெறுகிறது. பணம் திருப்பி தரமுடியவில்லையானால் முதலாளித்துவம் நடந்துக்கொண்டு தான் உள்ளது.

**சுரண்டல்**

மீரான்பிள்ளை ஓர் ஆனி ஆடி நேரம் சுண்ணாம்பு வாளை மீன் ஏராளம் பட்டது. அதை வாங்கி உப்பில் போட்டுக் காய வைத்தார். கொழும்பில் நல்ல விலை கோவில் பட்டிச் சந்தைக்கு அனுப்பவில்லை. தூத்துக்குடித் துறைமுகம் வழிக் கொழும்புக்கு ஈனா பீனா கூனா முதலாளியிடம் அனுப்பினார்.

"கோவில்பட்டிக்கு அனுப்புனவங்களுக்கெல்லாம் நல்லலாவம். அந்த ந';டத்தால் ஏற்பட்ட கடனுக்குப் புலிவங்க அறுபது செண்டை ஈனா பீனா கூனா முதலாளியின் பெயருக்கு மண்ணடங்க மரமடங்க எழுதிக் கொடுத்தார்"[7]

ஈனா பீனா கூனா என்னும் முதலாளி மீரான்பிள்ளை அனுப்பிய சுண்ணாம்பு வாளை மீன் நல்ல விலையில் விற்று விட்டு. குறைந்த விலைக்கு விற்றதாகக் கூறி அவரின் சொத்துக்களை எழுதி வாங்கிட்டார் என்பதை அறிய முடிகிறது.

**அலைக்கழிப்பு**

காசீம் என்பவர் ஈனா பீனா.கூனாக்கு எதிர்ரானவர். இவர் ஒரு கற்பாறையில் அவருக்கு எதிராக எழுதியுள்ளார். "இந்த கிராமத்து மக்களைச் சுரண்டிக்கொள்ளை போட்டு இந்தக் கிராமத்தையே வறுமைக்குழியில் தூக்கி வீசிய கொடுங்கோலன் ஈனா பீனா கூனாவுக்கா வரவேற்பு! அந்த அனியாயக்காரனை வரவேற்க பாவங்களை மிரட்டித் தலைவரி திட்டாதே…"[7]

என்று காசீம் எழுதினார். அதனை கண்ட பரீதுப்பிள்ளையை அனுசரித்துப் போகக் கூடிய நாற்பது பேரும் கூடி காசீமை ஒழித்துக்கட்ட பல வழிகளையும் ஆராய்ந்தனர். காசீமை போலிPஸில் பிடித்துக்கொடுக்க வேண்டு;ம் என்றும். அவன் குடும்பத்தை தங்க விடக்கூடாது என்றும் முடிவு எடுத்தனர். பல்வேறு நாட்கள் இரவில், பகலில் என எந்த நேரம் வேண்டுமானாலும் ஊருக்கும் போலிஸ் வரும் இதனைக் கண்டு மக்கள் அச்சம் அடைந்தார்கள். காசீம் கும்பத்தார் கடற்கரை ஓரத்தில் குடிசை அமர்த்தி இருந்தபோதும் அதனைக் களைத்து விரட்டினர். ஒரு பால் அடைந்த வீட்டில் தங்கியிருந்த பொழுதும் அவர்களை விரட்டினர்கள்.

**அரசியல்**

பண்டைய காலம் முதல் இக்காலம் வரை அரசியல் நடந்து கொண்டு தான் வருகிறது. சங்க காலத்தில் குடை குடிமக்களைக் காக்கும் சின்னமாகக் கருதப்பட்டது.

**"கண்பொர விளங்கு நின் விண்பொரு வியன் குடை**
**வேயில் மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய**
**குடி மறைப்பதுவே கூர்வேல் வளவ"[7]**

என்ற புறநானூற்று அடிகளின் மூலம் தனது குடிமக்களின் வருத்தம் ஒழிக்கப்பட்டதாகும். ஆனால துறைமுகம் புதினத்தில் தனது மக்களைக் காப்பாற்றுவதற்காக மீரான்பிள்ளை மகன் காசீம் சில அரசியல்வாதிகளுடன் சேர்ந்து தீர்மானம் செய்கின்றான்.

"தொழிலாளி வர்க்கத்தை ஒடுக்க முயலும் அடக்குமுறை ஆட்சிக்கெதிராக ஆயுதம் தாங்கிப் போர்களத்தில் இறங்கிய தொழிலாளர் வர்க்கத்தைச் சுட்டுவீழ்த்திய சி.பி.யின் ஆட்சியைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. அரசியல் தொடர்பில்லாத அப்பாவி மக்களை துப்பாக்கி முனையில் பிடித்துச் சென்று சிறையலடைத்து கொடூரமாகச் சித்திரவதை செய்வதற்கெதிராகச் காசீம் முன்வைத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்து. சி.பி.யின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக மக்களைத் திரட்டவும் ஆங்காங்கே கண்டனக் கூட்டம் போடவும் தீhமானம் நிறைவேற்றப்பட்டது."[8]

என்ற வரிகள் மூலம் அரசியல் முறையில் எவ்வாறு மக்கள் அடிமைப்பட்டு உள்ளனர் என்பதை அறிய முடிகிறது. பல்வேறு மக்கள் தங்கள் உரிமைகளுக்காக அரசியல் வாதிகளுடன் போரிட்டுக்கொண்டுதான் உள்ளார்கள்.

**கல்வி நிலை**

ஒரு மனிதன் வாழ்க்கையும் நாட்டின் வாழ்வையும் உயர்ந்துவது கல்வி ஆகும். சங்க காலத்தில்

அரசர்கள், புலவர்கள், பெண்கள் என வேறுபாடு இல்லாமல் அனைவரும் கல்வி கற்றனர். கல்வி கற்பதில் எவ்வித முரண்பாடும் இன்றி கற்றனர்.

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்"**[9]

மேலும்,

**"பிச்சை புக்குஆயினும் கற்றல் மிக இனிதே**
**நல் சவையில் கைக்கொடுக்கும் சாலவுர் முன் இனிதே"**[10]

என்ற வரிகள் மூலம் கல்வியின் சிறப்பை அறிய முடிகிறது. துறைமுகம் புதினத்தில்,

"என்னடா நேரத்தே வந்துட்டா? பீஸ் கட்டாத்தாலே ஸாரு, ஊட்டுக்குப் போவச் சொன்னாரு. பணம் வச்சிட்டாடா பீஸ் கட்டாதது நம்ம நேரம் வருமானமுள்ள வஸ்துவெல்லாம் போயாச்சு. சம்பயாவராத்திலெயும் ஒரு வறுக்கத்தும் இல்லே. பணயம் வச்ச உருப்படியும் இன்னும் எடுக்கல்லே நான். என்னடா செய்ய? நானும் ஓடியாடி ஒளச்சுத் தான் பாக்கேன். ஆண்டவன் நெனக்கண்டாமா? நீ இதோடப் படிப்பை நெறுத்து எனக்குக் கூட யாவரத்துக்கு வா"[11]

என்ற வரிகள் மூலம் மீரான்பிள்ளை தன் மகன் காசீமை பள்ளியை விட்டு நிற்கச் சொல்கிறார். தனது குடும்ப வறுமையினால் கல்வி கற்க வைக்க முடியாமல் மீரான்பிள்ளை தவிப்பை நம்மால் காணமுடிகிறது. இதனைப் போலத்தான் சமூகத்திலும் ஒவ்வொருவரும் தனது குடும்பத்தின் வறுமைக் காரணமாக தனது பிள்ளைகளைக் கல்வி கற்க வைக்காமல் உள்ளனர் என்பதும் நாம் கண்கூடாக காண்கிறோம்.

**வன்முறை**

துறைமுகம் புதினத்தில் விதவையான பாத்தக்குட்டியின் மகன் அலிக்கண்ணு. அந்தக் கிராம மக்களின் நினைவின் சுவரிலிருந்து பெயர்ந்து விழுந்து ஆண்டுகள் எத்தனையோ கடந்து விட்டன. அவனுடைய மறைவு மக்கள் மத்தியில் பெரும் ஆறுதலை அளித்தது. அலிக்கண்ணு ஒரு கேஸில் போலிசாரிடம் மாட்டிக்கொண்டான்.

"ஸ்ரீ சித்திரைத்திருநாள் மகாராசாவின் 'சிப்பாய்கள்' ஒரு திருட்டுக் கேஸில் புதுக்கடைச் சந்தையில் அவனைக் கவ்விப் பிடித்தனர். கூர்மையாக்கிய இளநீர்த் தொண்டினால் அவனுடைய மார்பில் குத்தினர். அவன் அழவில்லை. நகக்கண்ணில் குண்டூசிகளை அடித்து இறக்கிய போதும் அவன் அசையவில்லை குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை அனந்த பத்மநாபனின் நாடாகிய திருவிதாங்கூர் அரசும் போலீஸ் அதிகாரிகளும் அவன் முன்னால் தோல்வியை ஒப்புக் கொண்டனர்."[12]

இவ்வரிகள் மூலம் போலிஸ்காரர் அலிக்கண்ணு மீது எவ்வளவு வன்முறையைச் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

மனித வாழ்க்கையில் பல்வேறு அவலங்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. ஏழை

பணக்காரர்களின் ஏற்றத் தாழ்வுகள், துறைமுகம் புதினத்தில் தலையில் முடிவைத்தல் கூடாது என்ற அடக்குமுறை, தான் விற்கும் மீனுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று பிறரிடம் கூறாமல் இருக்க லஞ்சம் கொடுக்கும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் அடக்குமுறை, நல்ல விலைக்கு மீன் விற்றுத்தரப்படும் என்று கூறி குறைந்த விலைக்கு மீன் விற்கப்பட்டது என்று கூறும் அவலம், மேலும் கடன் அடையச் செய்தும், வீடு வாசல், சொத்து போன்றவற்றை ஏமாற்றி எழுதிக்கொள்ளும் அவலமும், தன்னை எதிர்பவனையும் போலீஸ்காரரிடம் பிடித்து கொடுக்கும் வன்முறை நிகழ்வையும் இக்கட்டுரையின் மூலம் காணமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1.பாரதியார் கவிதைகள்., ச.மெய்யப்பன் (ப.ஆ) ப.173. செப்டம்பர் 2008,
தென்றல் நிலையம்12பி மேல சன்னதி, சிதம்பரம் 608001.

2.தேவிரா. தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம்.ப.337. ஆகஸ்ட் 2015,
ஸ்ரீ நந்தினி பதிப்பகம் 36/16 முதல் தெரு வெல்கம் காலனி
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் சென்னை 101.

3. துறைமுகம், தோப்பில் முஹம்மது மீரான்,ப.73. அடையாளம்
1205/ சாலை புத்தனாதம் 621310.

4. மேலது., ப.164.

5. மேலது., ப.26.

6. மேலது., ப.32.

7. மேலது., ப.51.

8. மேலது., ப.150.

9. மேலது., ப.324.

10. சங்க இலக்கியம் - அறிஞர் ச.வே.சுப்பிரமணியன்.ப.549. மணிவாசகம்
பதிப்பகம் 31 சிங்கர் தெரு பாரிமுனை சென்னை 800108.

11. துறைமுகம. தோப்பில் முஹம்மது மீரான்.ப.281.

12. தமிழர் நாகரிகமும் பண்பாடும் அ.தட்சிணாமூர்த்தி.ப.162. யாழ்
வெளியீடு AP-1108 தென்றல் குடியிருப்பு மூன்றாவது தெரு மேற்கு
அண்ணாநகர் சென்னை 600046

13. பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் ச.வே.சுப்பிரமணியன்.ப.291.
மணிவாசகர் பதிப்பகம் 31 சிங்கர் தெரு பாரிமுனை சென்னை 600108.

14. துறைமுகம் தோப்பில் முஹம்மது மீரான்.ப.31.

15. மேலது., ப.145.